**இம்புல்பே பிரதேச சபை - 2022**

---------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இம்புல்பே பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இம்புல்பே பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு தரநியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்:

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.
- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,
- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றது எனவும்,
- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

**1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்படுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளானவை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டு மொத்தம் ரூபா 13,853,282 ஆன சபைக்கு சொந்தமான 03 காணிகள், 06 கட்டிடங்கள் மற்றும் ரூபா 2,730,527 பெறுமதியான ஏனைய சொத்துக்கள் மூலதனமாக்கப்படவில்லை. | சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | சரியாக கணக்கிடப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான நிலுவை பல்நோக்கு கட்டிட வாடகை ரூபா 140,000 கூடுதலாக கணக்கிடப்பட்டிருந்ததுடன் பெலிஹுல்ஒய சுற்றுலா விடுதிக்கான கிடைக்கப்பெற வேண்டிய வாடகை ரூபா 781,150 கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | சரியாக கணக்கிடப்பட வேண்டும். |
| (இ) | முந்தைய ஆண்டின் கணக்கீட்டு குறைபாடுகளைச் சரிசெய்வதற்காக, பிழையான இரட்டைப் பதிவுகள் காரணமாக, மீளாய்வாண்டின் இறுதியில் திரண்ட நிதியம் ரூபா 1,427,854 வால் கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது. | சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | சரியாக கணக்கிடப்பட வேண்டும். |
| (ஈ) | 07 கணக்கு விடயங்களின் மீளாய்வாண்டின் இறுதியில், நிதிக் கூற்றின் பிரகாரம் மீதி மற்றும் பயன்பாட்டு ஆவணங்களின்படி மீதிகளுக்கிடையில் ரூபா 10,800,813 வேறுபாடொன்று இருந்தது. | இனங்காமைகள் அடையாளம் காணப்பட்டு, மீதிகளை சமநிலைப்படுத்தும் பணி ஏற்கனவே செய்யப்பட்டு வருகிறது. | வேறுபாடு தீர்க்கப்பட வேண்டும். |

**1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை**

| விடயம் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டு மொத்தம் ரூபா 113,902,104 வான 05 கணக்கு விடயங்களை உறுதிப்படத்துவதற்கான விரிவான உப பதிவேடுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | தொடர்புடைய உப பதிவேடுகள் 2023 ஆம் ஆண்டின் கணக்குகளில் சமர்ப்பிக்கப்படுவதாக. | விரிவான உப பதிவேடுகள் கணக்குகளோடு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு இணங்கப்படாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசச் சபை சட்டத்தின் 24 ஆம் பிரிவின் (அ) மற்றும் (ஆ) துணைப்பிரிவுகளின் பிரகாரம், சபைக்கு சொந்தமான வீதிகள் அடையாளம் காணப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப் பட்டிருக்கவில்லை. | 2023 மே மாதத்திக்குள் வீதி வர்த்தமானியை வெளியிட தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 3,147,407 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 10,168,196 ஆகும்.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன**

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவள்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலி டப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலி டப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 2,908,337 | 859,515 | 863,702 | 160,622 | 909,308 | 856,868 | 811,964 | 271,401 |
| வாடகை | 4,375,480 | 3,211,450 | 2,744,860 | 493,180 | 3,665,080 | 1,749,230 | 1,749,230 | - |
| உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 1,831,000 | 588,026 | 588,026 | - | 1,831,000 | 446,825 | 446,825 | - |
| ஏனைய வருமானம் | 12,706,800 | 10,008,078 | 52,318,480 | 8,721,859 | 10,326,000 | 9,844,874 | 8,401,638 | 26,050,122 |
| | **21,821,617** | **14,667,069** | **56,515,068** | **9,375,661** | **16,731,388** | **12,897,797** | **11,409,657** | **26,321,523** |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆதனங்கள் 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை மதிப்பிடப்பட வேண்டிய போதிலும், 2011ஆம் ஆண்டுக்குப் பிறகு மதிப்பீடு செய்யப்படவில்லை. அத்தோடு, 2018ம் ஆண்டில் அடையாளம் காணப்பட்ட அபிவிருத்தியடைந்த பிரதேசங்களிலிருந்து வீதவரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | அபிவிருத்தியடைந்ததாக இனங்காணப்பட்ட பிரதேசங்களிலிருந்து வீதவரி அலகுகளை அடையாளம் காணும் நடவடிக்கைகள் 2022 ஆம் ஆண்டில் நிறைவடைந்துள்ளதுடன், வீத வரி மதிப்பீட்டிற்கான மேலதிக பணிகள் மேற்கொள்ளப்படுவதாக. | பிரதேசச் சபை சட்டத்தின் 134 வது பிரிவின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 10 நீர் செயற் திட்டங்களிலிருந்து 01 வருடத்திற்கு மேற்பட்ட பழைய ரூபா 8,122,689வும், 03 வருடங்களுக்கு மேல் பழைய ஏக்கர் வரி ரூபா 100,285வும், JCB இயந்திரம் வாடகைக்கு வழங்குவது மூலம் ரூபா 610,840வும் அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும், JCB இயந்திரத்தை வெளி வேலைகளுக்கு கட்டணமின்றி வழங்கியதன் மூலம் ரூபா 179,550 வருமானம் இழந்துள்ளதுடன், பரிந்துரைக்கப்பட்ட கட்டணத்திற்கு முரணாக, கட்டணம் அறவிடப்பட்டதனால் ரூபா 126,335 வருமானமும் இழக்கப்பட்டுள்ளது. | நிலுவைத் தொகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். 2023 ஆம் ஆண்டில், ஒரு இயந்திர மணி நேரத்திற்கு மதிப்பிடப்பட்ட தொகை திருத்தப்பட்டு வர்தமானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | நிலுவைத் வருமானம் தாமதமின்றி அறவிடப்படல் வேண்டும். |
| (இ) | பெலிஹுஃல்ஓய சுற்றுலா விடுதிக்காக 2021 ஏப்ரல் முதல் டிசம்பர் வரை அறவிடப்பட வேண்டிய ரூபா 413,550 தொகை, விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர்/ஆளுநரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் நீக்கப்பட்டிருந்தது. | ஆளுநரின் அங்கீகாரதினை பெறுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | ஆளுநரின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திண்மக் கழிவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உக்கிப்போகாத கழிவுகள் அதிக அளவில் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் கொட்டப்பட்டிருந்தது. உக்கிப்போகாத கழிவு மத்திய | இனிவரும் காலங்களில் உக்காத கழிவு மையமொன்று நிர்மானிப்பதற்கான தேவையான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, உரிய துறைக்கு | தேவையான வசதிகளை பெற்று இயந்திரத்தை பயன்படுத்த |

| | | |
|---|---|---|
| நிலையத்திற்காக 2022 ஜுன் மாதத்தில் பெறப்பட்ட ரூபா 950,000 பெறுமதியான பேலர் இயந்திரம் 2022 டிசம்பர் வரையிலும் பாவனையின்றி காணப்பட்டது. | சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென்பதாக. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2002 முதல் 2009 வரையான காலத்திற்குரிய இகங்காணப்படாத முற்பணங்கள் ரூபா 3,193,731 நீக்குவதற்காக ஆளுநரின் அங்கீகாரதிற்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும், 2010 முதல் 2022 வரை வழங்கப்பட்ட ரூபா 1,072,697 தொகையான 10 முன்பணங்கள் மீளாய்வாண்டு இறுதி வரை தீர்க்கப்படவில்லை. | அந்த மீதிகளை நீக்குவதற்காக ஆளுநரின் அங்கீகாரதினை பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பஹன்துடாவ நீர்வீழ்ச்சிக்கு அருகாமையில் ரூபா 1,852,279 பெறுமதியில் நிறைவுசெய்யப்பட்ட கழிவறை கட்டமைப்புடன் கூடிய காணி சபையக்கு சுவீகரிக்கப்படாததுடன் சபைக்கு சொந்தமான 133 மயானங்களின் உரிமையும் தீர்க்கப்படவில்லை. இதனால், அந்த கானிகள் அனுமதயற்ற முறையில் கையகப்படுத்தும் அபாயம் காணப்பட்டது. | குறித்த நிலப்பகுதியை சபையிக்கு சுவீகரிப்பதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனத்திடம் கோரப்பட்டுள்ளதாக. | உரிய நிலப்பகுதியை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான 24 காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படவில்லை. | சபைக்கு சொந்தமான காணிகளை மதிப்பீடு செய்வதற்கு மதிப்பீட்டு திணைக்களத்திற்கு கடிதங்கள் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக. | காணிகளை மதிப்பீடு செய்து கணக்கிடப்பட வேண்டும். |

### 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தியபஹச விடுதியை 2022 நவம்பர் 01ஆம் திகதி முதல் எதிர்வரும் 08 மாதங்களுக்கு நடாத்தப்படுவது, பெறுகை நடைமுறைக்கு அப்பால் மற்றும் ஒப்பந்தம் மேற்கொள்ளப்படாமலும் முந்தைய குத்தகைதாரருக்கே வழங்கப்பட்டிருந்தது. | குத்தகைக்கு வழங்குவதற்கு பொதுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் ஆளுநரின் அங்கீகாரத்திக்காக அனுப்பப்பட்டுள்ளதாக. | பெறுகை நடைமுறையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**3.5 ஒப்பந்த நிருவகத்திலுள்ள குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கெபொக்வத்தை கொம்போஸ்ட் முற்றத்தில் தடுப்புச் சுவர் நிர்மானிக்கும் போது ரூபா 51,290 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள தொகை தடுத்துவைக்கப்பட்ட தொகையிலிருந்து குறைக்கப்படுவதாக. | மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகை குறைக்கப்பட வேண்டும். |

**3.6 வாகனத் தொகுதியின் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 2011ஆம் ஆண்டு சபைக்கு கிடைத்த ரூபா 1,550,000 வான கலி பவுசர் கிடைத்த நாள் முதல் விளைவற்று காணப்பட்டது. | கழிவுகளை அகற்ற இடமொன்று இல்லாததனால், அது வேறு உள்ளூராட்சி நிறுவனமொன்றுக்கு வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | இது தேவைப்படும் நிறுவனத்திற்கு கையளிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமில்லாத 05 உழவு இயந்திரங்கள் மற்றும் 04 இழுவை பெட்டிகளின் உரிமைகளை சுவீகரிப்பதற்கோ அல்லது மீள ஒப்படைப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாதுள்ளதுடன் உடைந்த வாகனமொன்று அப்புறப்படுத்தப்படவில்லை. | அந்த சொத்துக்களை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் ஒதுக்கப்பட்ட கெப் வாகனம் சப்ரகமுவ மாகாண சபைக்கு சொந்தமான வாகனம் என்பதால் அது தொடர்பில் பிரதம செயலாளருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |